புரட்சிப்

# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுன் (JUNE) 18, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 25 • விலை(PRICE) ரூ.6.00

## அயோத்தி ராமன் கோயில் ஊழல் சந்தி சிரிக்கிறது

# பெருகிவரும் கோயில் கொள்ளைகள்

*அண்மைக்காலமாக கோயில் நிர்வாகிகள் அர்ச்சகர் திருட்டு மோசடியில் ஈடுபடும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கோயிலுக்குள்ளே இருக்கும் அதிகாரிகள், அர்ச்சகர்கள் கடவுளை ஏமாற்றி ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.*

இந்தியாவின் தேசிய அடையாளம் போல் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயில் அயோத்தியில் கட்டப்பட்ட "ஸ்ரீ ராம ஜென்ம பூமி" கோயிலில் கோடிக்கணக்கான ரூபாய் நன்கொடை மோசடி குறித்து அதிர்ச்சியான தகவல் வெளிவந்துள்ளது.

கோயிலைக் கட்டிய ராமஜென்ம பூமி அறக்கட்டளை கோயிலுக்கு நிலம் வாங்கியதில் பெரும் ஊழல் நடந்ததாக குற்றச்சாட்டுகள் வெளிவந்தன. பல மடங்கு கூடுதலாக விலையை உயர்த்தி நிலம் வாங்கப்பட்டது. இந்த ஊழல் மூடி மறைக்கப்பட்டது.

இப்போது கோயில் கட்டுவதற்கு வசூலிக்கப்பட்ட நன்கொடையில் பெருமளவு ஊழல் நடந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அர்ச்சகர்கள் அறங்காவலர்கள் உறுப்பினர்கள் கையாடல் செய்துள்ளனர். இது குறித்து சி.பி.அய் விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு வந்துள்ளது. வழக்கு வந்தவுடன் உபியில் ராமராஜ்யம் நடத்தும் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மூன்று சிறப்பு புலனாய்வுக் குழுக்களை அமைத்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

உ.பி சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் சனாதன தர்மத்தை பாஜக அவமதித்துள்ளது. ராமர் கோயிலுக்குள்ளேயே திருடர்கள் இருக்கிறார்கள், பக்தர்கள் கோயிலுக்கு நம்பிக்கையோடு தந்த நகைகளைத் திருடுகிறார்கள்; இது சனாதனத்தை அவமதிக்கிறது என்று அறிக்கை விடுத்துள்ளார். தனக்கு கோயில் கட்ட வேண்டும் என்று தனது கனவில் ஸ்ரீராமர் கூறியதாக பேசிய பிரதமர் மோடி மவுனம் சாதிக்கிறார்.

**ராமேஸ்வரத்தில் உள்ள ராமசாமி கோயில் குறித்து கடந்த சில ஆண்டுகளில் வெளிவந்த முறைகேடுகள்**

**1. லட்டு விநியோக மோசடி (₹3.4 கோடி):** 2026 மே மாதத்தில் கோயிலின் இலவச லட்டு திட்டத்தில் சுமார் ₹3.4 கோடி மதிப்பிலான முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டது. 2023-2026 காலகட்டத்தில் இலவசமாக வழங்க வேண்டிய லட்டுகள் சட்டவிரோதமாக விற்கப்பட்டதாகவும், கணக்கில் முரண்பாடுகள் இருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து 6 ஊழியர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டு, 3 தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

**2. உண்டியல் திருட்டு முயற்சிகள்:** ராமேஸ்வரம் கோயிலில் உண்டியலை உடைத்து பணம் திருட முயன்ற சம்பவங்கள் முன்பும் பதிவாகியுள்ளன. 2007-ல் உண்டியலின் பூட்டுகளை உடைக்க முயற்சி நடந்ததாக காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

**3. நகை முறைகேடு குற்றச்சாட்டுகள்:** கோயில் நகைகள் தொடர்பாக சில ஆண்டுகளுக்கு முன் குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால் கோயில் நிர்வாகம், மறுமதிப்பீட்டில் எடை குறைவு "தேய்மானம் மற்றும் பழுது பார்க்கப்பட்டதன் விளைவு" என விளக்கம் அளித்து, நகை கையாடல் இல்லை என்று தெரிவித்தது.

**4. கோயில் நிலங்கள்:** ராமேஸ்வரம் கோயிலை மட்டும் குறிவைத்து சமீபத்திய பெரிய நில மோசடி வழக்கு வெளிவரவில்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதும் கோயில் நில ஆக்கிரமிப்புகள் குறித்து 'Hindu Religious and Charitable Endoments Department' துறை சார்பாக அரசுக்கு எதிராக உயர்நீதிமன்றம் பலமுறை கண்டனம் தெரிவித்துள்ளது. கோயில் நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டுள்ளது.

### சபரிமலை

சமீப காலத்தில் மிகவும் கவனம் பெற்றது "சபரிமலை தங்க மோசடி" வழக்காகும். 2019-ல் கோயிலின் தங்க முலாம் பூசப்பட்ட சில பகுதிகள் பராமரிப்புக்காக அகற்றப்பட்டபோது, அவற்றில் இருந்த தங்கத்தின் அளவில் முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. கேரள உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்பு புலனாய்வுக் குழு (SIT) விசாரணை நடத்தி வருகிறது. பல கிலோ தங்கம் கணக்கில் இல்லை என்றும், சில தங்கப் பொருட்கள் முறைகேடாக கையாளப்பட்டிருக்கலாம் என்றும்




விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. இந்த வழக்கில் தேவசனம் வாரிய அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சில கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடைய நபர்கள் மீது விசாரணை நடைபெற்றுள்ளது. மேலும் நெய் விற்பனை வருவாய் தொடர்பான முறைகேடு குறித்தும் உயர்நீதிமன்றம் கவலை தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கியமாக, இவை அனைத்தும் விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளில் உள்ள விவகாரங்கள்; இறுதி குற்றப்பொறுப்பு நீதிமன்றத் தீர்ப்புகளால் மட்டுமே உறுதிப்படுத்தப்படும்.

### திருப்பதி லட்டு

திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட நெய்யில் கலப்படம் செய்யப்பட்டதாக எழுந்த புகாரை அடுத்து, உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட மத்தியப் புலனாய்வு அமைப்பு (CBI) தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு (SIT) தனது விரிவான விசாரணையை முடித்து, நீதிமன்றத்தில் இறுதி குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது.

சுமார் 15 மாதங்கள், 12 மாநிலங்களில் நடத்தப்பட்ட இந்த விசாரணையில், ரூ.250 கோடி மதிப்பிலான மிகப்பெரிய நெய் மோசடி மற்றும் முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

- **போலி நெய் விநியோகம்:** 'உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த 'போலே பாபா ஆர்கானிக் டெய்ரி' (Bhole Baba Organic Dairy) நிறுவனத்தின் இயக்குநர்களான பொமில் ஜெயின், விபின் ஜெயின் ஆகியோர் இந்த மிகப்பெரிய மோசடியின் பின்னணியில் உள்ள முக்கிய சூத்திரதாரிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

- **பால் இல்லாத டைரி:** இந்த நிறுவனம் தொடங்கப்பட்டதில் இருந்தே மாட்டுப் பாலைக் கொள்முதல் செய்யவில்லை என்றும், முழுக்க முழுக்க போலி நெய் தயாரிப்பதற்காகவே இது இயங்கியுள்ளது என்றும் குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

- இந்த வழக்கில் மொத்தம் 36 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் மோசடி நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த திருப்பதி தேவஸ்தான (TTD) கொள்முதல் மற்றும் விற்பனைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும், ஊழியர்களும் அடங்குவர்.

- **செயற்கை வேதிப்பொருட்கள்:** தூய்மையான பசு நெய்க்குப் பதிலாகப் பாமாயில், பாம் கெர்னல் ஆயில் (Palm Kernel Oil), பாமோலின் ஆயில் போன்ற தாவர எண்ணெய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- **போலி மணம் மற்றும் நிறம்:** இந்தத் தாவர எண்ணெய்களை நெய் போல மாற்றுவதற்காக, மஞ்சள் நிறத்தைத் தரும் பீட்டா-கரோட்டின் நெய் வாசனைக்கான செயற்கை ஃபிளேவர்கள் மற்றும் அசிட்டிக் ஆசிட் ஈஸ்டர் போன்ற வேதிப்பொருட்கள் கலக்கப்பட்டுள்ளன.

### 5-ஆண்டுகள் நீடித்த முறைகேடு

விசாரணைக் குழுவின் தகவல்படி, இந்த முறைகேடு 2019 பிப்ரவரி முதலே (ஆட்சி மாற்றத்திற்கு முன்பிருந்தே) தொடங்கப்பட்டு, 2020 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் மிகவும் திட்டமிட்டு ஒரு கூட்டணியாக அரங்கேற்றப்பட்டுள்ளது. இந்த மோசடியை அய்ந்து ஆண்டுகள் தடையின்றி நடத்த, போலி நிறுவனங்கள் தரப்பில் இருந்து தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் சில நிபுணர்களுக்கு ரூ.19.86 கோடி வரை ஹவாலா மூலமாகவும், நேரடியாகவும் லஞ்சமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பணமாக மட்டுமின்றி, தங்க, வெள்ளி நாணயங்கள் மற்றும் விலையுயர்ந்த ஸ்மார்ட்போன்களும் லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலை:** திருப்பதி தேவஸ்தானம் தற்போது நெய் கொள்முதல் விதிகளை மிகவும் கடினமாக்கியுள்ளது. மேலும், லட்டு பிரசாதத்தின் 'புனித'த்தன்மையையும், பக்தர்களின் நம்பிக்கையையும் மீட்டெடுக்கும் வகையில் கோயிலில் **'சாந்தி ஹோமம்' போன்ற தூய்மைச் சடங்குகள் நடத்தப்பட்டன!** மேலும், நெய்யின் தரம், சுவை மற்றும் மணத்தைச் சோதிக்க பிரத்யேக நிபுணர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. அண்மையில்(மே 2026), தரம் குறைபாடுடைய நெய் பயன்பாட்டை முற்றிலும் தடுக்கக் கூடுதல் விசாரணை ஆணையம் ஒன்றையும் ஆந்திர அரசு நியமித்துள்ளது. இப்படி கடவுளிடம் நெருக்கமாக இருப்பவர்கள் கடவுள் தண்டிப்பார் என்று அச்சப்படாமல் கடவுள் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு கொள்ளை அடிக்கிறார்கள்.

## சுவீடனில் ரத்த உறவு திருமணங்களுக்கு தடை!

சுவீடன் நாடாளுமன்றத்தில் மே-26, 2026 அன்று ரத்த உறவு திருமணங்களைத் தடை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது 2026 ஜூலை 1 முதல் அமலுக்கு வருகிறது.

எதைத் தடை செய்கிறது? முதல் உறவினர் திருமணம், அதாவது அத்தை/மாமா/சித்தப்பா/பெரியப்பா மகன்-மகள் போன்ற உறவுகளுக்கிடையிலான திருமணம் தடை. அதேபோல், ஒருவரின் சகோதரர் அல்லது சகோதரியின் நேரடி சந்ததியினருடன் திருமணம் செய்வதும் தடை செய்யப்படுகிறது.

ஏன் இந்தச் சட்டம்? ஸ்வீடன் அரசு இதை இரண்டு கோணங்களில் பார்க்கிறது: நெருங்கிய உறவினர் திருமணங்களில் குழந்தைகளுக்கு மரபணு சார்ந்த உடல்நல ஆபத்துகள் அதிகரிக்கும் என்ற சுகாதாரக் கவலை; மேலும் சில சமூகங்களில் குடும்ப அழுத்தம், கட்டாயத் திருமணம், ஆணாதிக்கக் கட்டுப்பாடு போன்றவற்றைத் தடுக்க வேண்டும் என்ற சமூகநீதி காரணம். வெளிநாட்டில் நடந்த இப்படிப்பட்ட திருமணங்களையும் பொதுவாக ஸ்வீடன் அங்கீகரிக்காது என்று சட்டம் கூறுகிறது. ஏற்கனவே நடந்த திருமணங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது. சட்டம் அமலுக்கு வந்த பிறகான திருமணங்களைத் தடுக்கிறது; இந்தியாவில் பல சமூகங்களில் அத்தை மகள், மாமன் மகள், மச்சான்-மச்சினி போன்ற உறவினர் திருமணங்கள் வழக்கமாக உள்ளன. ஆனால் ஸ்வீடன் போன்ற நாடுகள் இதை தனிநபர் உரிமை மட்டும் அல்லாமல், குழந்தை நலம், கட்டாயத் திருமணத் தடுப்பு, பெண்களின் சுவாதீனம் ஆகிய கோணங்களில் சட்டரீதியாக கட்டுப்படுத்துகின்றன.

இங்கே ஜாதிமறுப்பு திருமணம் செய்தால் ஆணவப் படுகொலை நடக்கிறது. சுவீடனில் குடும்ப உறவுக்குள் நடக்கும் திருமணம் தடைசெய்யப்படுகிறது.

**தலையங்கம்**

# அம்பேத்கரைத் திரிக்கும் பார்ப்பனியம்!

விஜில் என்ற பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பச்சையாக அம்பேத்கர் பார்வையில் சனாதனம் என்ற ஒரு கருத்தரங்கை நடத்தி அம்பேத்கரின் கருத்துக்களைத் திரிக்கும் புரட்டுகளை செய்திருக்கிறது. “பிராமணர்; சத்திரியர்; வைசியர்” என்ற பிரிவுகள் வர்ணம் அல்ல என்றும் அது குருகுலக் கல்வியில் தருகிற கல்வி பட்டம் என்றும் ஒரு ஆராய்ச்சியாளர் பேசியிருக்கிறார். இதில் கூட “சூத்திரர்” என்ற பிரிவை அவர் மிக சூழ்ச்சியாக ஒதுக்கி இருக்கிறார். அடிமை வேலை செய்வதற்காகவே சபிக்கப்பட்ட “சூத்திரர்களும்” குருகுலத்தில் படித்து பட்டம் பெற்று வந்தவர்களா? என்ற கேள்வி எழுமே என்ற காரணத்தினால் இதை தவிர்த்து இருக்கிறார்கள்.

குருகுலக் கல்வியில் குருவாக இருக்கும் தகுதியே “பிராமணருக்கு” மட்டும்தான் உண்டு; இந்தப் “பிராமண” குரு எந்தக் குருக்குலத்தில் படித்து அதற்கான பட்டத்தைப் பெற்றார் என்பதை இவர்களால் விளக்க முடியுமா? பிறப்பின் அடிப்படையில் பாரம்பரிய உரிமையாக கட்டமைக்கப்பட்ட இந்தக் கொடூரமான பார்ப்பனிய ஆதிக்கத்தை கல்வித் தகுதியாக மடைமாற்றி “காதில் பூ” சுற்றுகிறார்கள்.

அப்படியானால் முறையான அர்ச்சகருக்கான கல்வியையும் பட்டத்தையும் பெற்றவர்கள் கோயிலில் அர்ச்சகராக வரவேண்டும் என்று சொன்னால் அவர்களும் “பிராமணர்கள்” தான் என்று அங்கீகரித்து அர்ச்சகர் பதவியை வழங்காமல் நீதிமன்றத்திற்கு போய் ஏன் தடை வாங்க வேண்டும் ? “பிராமணர்” சங்கத்தில் உறுப்பினராக வேண்டும் என்று சொன்னால் உரிய வேதக் கல்வி தகுதி வேண்டும் என்று இவர்கள் நிபந்தனை விதிப்பார்களா?

வேத உபநயனம் செய்யும் உரிமை பிராமணர்களுக்கு மட்டுமே உண்டு என்ற நிலையில் குருகுலத்தில் இவர்கள் பிற சமூகத்தினரைச் சேர்த்தார்கள் என்பதை எப்படி ஏற்க முடியும் ? அதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டா?

வேதங்களைக் கற்பித்த குருகுலத்தில் முறையாக வேதத்தை பயிலாதவர்களை பிராமணர்களாக ஏற்க முடியாது என்று வகைப்படுத்தி “சத்திரியர், வைசியர்” நிலைக்கு தள்ளப்படும் முறை ஒரு காலத்தில் இருந்தது; ஆனால் பிராமணர்களாக பிறந்த அனைவருமே வேதங்களை முறையாக பயிலாவிட்டாலும் அவர்கள் பிராமணர்கள் தான் என்ற பிறவி ஆதிக்க வெறியில் உபநயனம் செய்து பிராமணராக்கும் உரிமையை~ குருவிடமிருந்து சூழ்ச்சியாக தந்தைக்கு மாற்றிக்கொண்டு பிராமண பிறவி உரிமையை பரம்பரை ஆக்கிக் கொண்டார்கள் என்று அம்பேத்கர் தெளிவாக எழுத்துகளில் பதிவு செய்திருக்கிறார்.

பிராமணர்கள் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட இரண்டாம் தர குடிமக்களாக வாழ்ந்தார்கள் என்று அம்பேத்கரே கூறியிருக்கிறார் என்ற ஒரு அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விடுகிறார்கள். எங்கே? எப்போது? அம்பேத்கர் இப்படி ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்? என்பதை இவர்களால் கூற முடியுமா? பார்ப்பனியத்தின் கொடுங்கோன்மையை அதன் வேத புராண சாஸ்திரங்களில் இருந்தும் வரலாற்றில் இருந்தும் எடுத்துக்காட்டி முகத்திரையை கிழித்தவர் அம்பேத்கர்

"வர்ணாசிரமத்தை ஜாதியாக உருமாற்றம் செய்தது பார்ப்பனியம்; இந்த வேலையைச் செய்து முடித்துவிட்டு சமூகத்தை அதற்கு ஏற்ப மாற்றி அமைக்க மனு தனது சட்டத்தை எழுதினார்"என்று எழுதுகிறார் அம்பேத்கர். ஆனால் அம்பேத்கர் பிராமணர்கள் இரண்டாம் தர மக்களாக ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள் என்று கவலைப்படுவதாக பச்சைப் பொய்யை அவிழ்த்து விடுகிறார்கள்.

அம்பேத்கர் எழுதிய சட்டத்தை போல் மனு சாத்திரமும் ஒரு சட்ட நூல்தான் என்று வெட்கம் இன்றி நியாயப்படுத்துகிறது இந்த கூட்டம் மனு சாஸ்திரம் திணித்த பாகுபாடுகளுக்கு எதிராக சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று மனு சாஸ்திரத்தை உடைத்து எறிய வந்ததுதான் இந்திய அரசியல் சட்டம். மனு சாஸ்திரத்தில் மட்டுமா? பைபிளிலும் பாகுபாடு இருக்கிறது என்று ஒரு ஆராய்ச்சியாளர் பேசியிருக்கிறார். அப்படியே இருந்தாலும் கிறிஸ்துவ சமூகம் பைபிள் அடிப்படையில் பிறப்பின் அடிப்படையில் உலகில் எங்கும் பாகுபாடு காட்டுவது இல்லை.

மனுவின் சட்டம் தான் உலகில் எங்குமே இல்லாத ஏணிப்படி வரிசையிலான ஏற்றத்தாழ்வுகளை இந்தச் சமூகத்தில் திணித்திருக்கிறது. மனு சாஸ்திரத்தை தீயிட்டு பொசுக்கிய அம்பேத்கரை மனு சாஸ்திர ஆதரவாளராகவும் பிராமண ஆதரவாளராகவும் சித்தரிப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.

சில மாதங்களுக்கு முன்பு பாரதி விழாவை நடத்தி அதில் ஒரு இன துரோகியை பிடித்து பிராமண கடப்பாரையை தூக்குவேன் என்று பேச வைத்தது இதே பார்ப்பன அமைப்பு தான். இந்த உருட்டுகள் இந்த மண்ணில் வேகாது இது வேத காலம் அல்ல; வேத இதிகாச புராணங்களை விரட்டி அடிக்கும் சமத்துவ யுகம்!

## ‘உண்மையான’ பக்தர்கள் எங்கே?

“கோயில் அறங்காவலர்களாக உண்மையான கடவுள் பக்தர்களையே நியமிக்க வேண்டும். நாத்திகர்களை நியமிக்கக் கூடாது” என்கிறார் இந்து முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம். பார்ப்பனர்கள், நீதிபதிகள், சங்கிகள் பலரும் உண்மையான பக்தர்களைத் தேடி அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால் உண்மையான பக்தர்களை எப்படி கண்டுபிடிப்பது என்பதுதான்!

உண்மையான நோய்களை கண்டுபிடிப்பதற்கு ஸ்கேன், எக்ஸ்ரே வந்துவிட்டன. உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு சிசிடிவி கேமராக்கள் வந்துவிட்டன. உண்மையான பக்தர்களை எப்படி கண்டுபிடிப்பது? நாள் தவறாமல் பூஜைகளை செய்கிறவர்கள்; நெற்றியில் அடையாள மார்க்குகளை வைத்திருப்பவர்கள்; ஆச்சாரங்களை அனுதினமும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பவர்கள் இவர்களை எல்லாம் உண்மையான பக்தர்களாக அங்கீகரிக்கலாமா?

அதற்கும் வாய்ப்பு இல்லை! கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருந்து நீதிமன்றம் கொண்டுவரப்படும் குற்றவாளிகளைப் பாருங்கள்; அவர்கள் பழுத்த பக்தர்களாக விபூதி, குங்குமத்துடன் காட்சித் தருகிறார்கள். ஊழல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு முன்ஜாமின் பெற்று வெற்றிப் புன்னகையுடன் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வரும் அரசியல் தலைவர்களைப் பாருங்கள்; நெற்றி முழுவதும் வண்ணமயம், கைகளில் கலர் கலர் கயிறுகள்.

அர்ச்சகர் என்றாலும் அதிகாரிகள் என்றாலும் கோயில்களில் நடக்கும் கொள்ளைகள், திருட்டுகள் பற்றி செய்திகள் வராத நாட்களே இல்லை. திருப்பதி, இராமேஸ்வரம், சபரிமலை, அயோத்தி என்று பிரபலமான கடவுள்களிடம் நெருக்கமாக இருக்கும் அர்ச்சகர்கள் உண்மையான பக்தர்களா? என்றால் அதுவும் இல்லை!

தங்கத்தைச் சுரண்டுகிறார்கள்; உண்டியல் பணத்தைக் கையாடுகிறார்கள்; பிரசாதத்தில் கலப்படம்; தங்க நகைகளுக்குப் பதிலாக பித்தளை நகைகளை மாற்றுகிறார்கள். இவ்வளவுக்கும் எந்தக் கடவுளும் எதிர்க்கவும் இல்லை; கண்டிக்கவும் இல்லை; தண்டிக்கவும் இல்லை! திருட்டு, மோசடி, கொள்ளை, ஊழல் எல்லாம் முடிந்த பிறகு சமஸ்கிருத மந்திரத்தை அவிழ்த்துவிட்டு பரிகாரம் செய்தால் போதும்; திருட்டுத் தீட்டுகள் ஓடிவிடும். உண்மையான பக்தர்களைக் கண்டுபிடிப்பதை விட, உண்மையான கடவுளையோ, கடவுள் சக்தியையோ கண்டுபிடிக்க முடியவில்லையே என்கிறார் ஒரு பகுத்தறிவாளர்.

நியாமான கேள்விதான். ஆனால் இப்படிக் கேட்டால் சங்கிகள் “புண்படுத்துகிறது” என்று கம்புசுத்துவார்கள். நீதிமன்றம் ஓடுவார்கள்; உடனே விளக்கம் கேட்டு நோட்டிஸ் அனுப்ப சில நீதிபதிகள் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சரி! வழக்குப் போடுகிற ஆசாமி உண்மையான பக்தர் தானா? என்பதற்கு என்ன ஆதாரம்? இதற்கு யார் சாட்சிக்கு வர வேண்டும்? அவதாரம் எடுத்து அந்த ஆண்டவன்தான் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். அவனுக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்குமா?

இதெல்லாம் நடக்கிற காரியமா, சார்? கடவுளாவது; ஆண்டவனாவது? அவன் நீதிமன்றம் வருவதாவது? ஏதாவது பகுத்தறிவுடன் பேசுங்க சார், என்று வழக்குப் போட்ட பக்தர்களே கேட்க ஆரம்பித்து விடுவார்கள்; அதைத் தானப்பா பகுத்தறிவாளர்களும் கேட்கிறார்கள்.

-கோடங்குடி மாரிமுத்து.

## பள்ளிகளில் ஜாதிக் கயிறுகளுக்குத் தடை!

*பள்ளிகளில் ஜாதிக் கயிறு, மத அடையாளங்களை மாணவர்கள் அணிய அனுமதி இல்லை என்ற பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவிப்பை பாராட்டி வரவேற்கிறோம்.*




*பள்ளிகளில் மாணவர்களிடையே ஜாதிக் கலவரங்கள் தாக்குதல்கள் நடந்ததை ஒட்டி திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு அவர்கள் தலைமையில் அமைத்த குழு அளித்த முக்கிய பரிந்துரைகளில் இது ஒன்றாகும்.பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் நீதிபதி சந்துரு பரிந்துரைகளை அரசு ஏற்று செயல்படுத்தும் என்று அறிவித்திருப்பதையும் பாராட்டி வரவேற்க வேண்டும். இந்த அறிவிப்பு வந்தவுடன் முதல் எதிர்ப்பு பாஜக தலைவர் நயினாரிடம் இருந்து வந்திருக்கிறது."ஜாதி மத அடையாளங்கள் தமிழர் மரபு என்றும் பாரம்பரியம் என்றும் அதில் கை வைக்கஅனுமதிக்க மாட்டோம்" என்றும் மிரட்டுகிறார்.*

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதே தமிழரின் அடையாளம், ஜாதியும் மதமும் அல்ல. ஆரிய பார்ப்பனியத்தின் சூழ்ச்சியால் திணிக்கப்பட்ட அடிமைச் சின்னங்களை தமிழர் மரபு என்று பாஜக கொண்டாடலாம் ஆனால் தமிழ் இன உணர்வாளர்கள் ஒருபோதும் அதை ஏற்க மாட்டார்கள். மாணவர்களிடம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்குவதே பள்ளிகளின் நோக்கமாக இருக்க வேண்டும். பூணூல், உச்சிக் குடுமி அடையாளங்களுடன் பிராமணர்களுக்கு மட்டுமே வேதங்களைக் கற்பிக்கும் குருகுலங்கள் மட்டுமே இந்த நாட்டில் இருந்தன. இதற்கு மாற்றாக அனைத்து சமூகப் பிரிவு மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து ஒரே பாட நூலை படிக்கும் பள்ளிக் கல்விமுறையை அறிமுகப்படுத்தியது பிரிட்டிஷ் ஆட்சியில் மெக்காலே என்ற அதிகாரி தான். பார்ப்பனியத்தின் மத அடையாளங்களையும் பாகுபாடுகளையும் ஒழிக்க வந்த பள்ளிக்கல்வி முறையில் ஜாதி அடையாளத்தையும் மத அடையாளத்தையும் மீண்டும் திணிப்பது பள்ளிக்கல்வி நோக்கத்திற்கே எதிரானதாகும். மிரட்டலுக்கு பணிந்து விடாமல் பள்ளிக் கல்வி அமைச்சர் உறுதியோடு இத்திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்."*

*- "விடுதலை இராசேந்திரன்",*

*(குறிப்பு: அமைச்சர் ராஜ்மோகன் அதற்குப் பிறகு விபூதி, குங்குமம் அணியலாம்; ஜாதிக்கயிறு மட்டுமே தடை செய்யப்படுகிறது என்று விளக்கமளித்துள்ளார். முதலமைச்சர் ஜோசப் விஜய் நெற்றியில் பொட்டு வைத்திருப்பதாலோ என்னவோ அமைச்சர் இப்படி ஒரு மறுஅறிவிப்பை வெளியிட்டிருப்பார் போல் தெரிகிறது. )*

# ஜாதி எதிர்ப்பும் உட்ஜாதி அரசியலும்!

ஜாதி கடந்த காதல் உணர்வுகளைச் சார்ந்து நிற்கிறது! ஜாதிகளுக்கிடையே உள்ள பிரிவுகளை மறுக்கிறது. ஜாதி சமூக அடுக்குகளை எதிர்க்கிறது என்பது காதல் குறித்த பார்வையாக இருக்கிறது. அது உண்மைதான்; ஆனால் காதலை மட்டும் சமூகம் உணர்வு சார்ந்த பார்வையாக மட்டும் பார்க்காமல் அரசியலாகவும் பார்க்க வேண்டும். சமூகத்தில் காதல், ஜாதி எதிர்ப்புக்கான அரசியல் முன்னெடுப்புக்கும் சமூக மாற்றத்திற்கான அரசியல் கருவியாகவும் செயல்படுகிறது. காதலில் சமூக மாற்ற ஜாதி ஒழிப்பை நோக்கிய அரசியல் இருக்கிறது என்பதே அம்பேத்கர் பெரியார் போன்ற தலைவர்கள் மற்றும் மேற்கத்திய சிந்தனையாளர்களின் கருத்தாகும்.



ஹைதராபாத் பல்கலைக்கழக ஆய்வு பட்டப் படிப்பு மாணவரான ரோகித் வெமுலா அம்பேத்கர் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட மிகச் சிறந்த கவித்துனமான அறிவியல் மாணவர். மதவாத ஜாதி வெறி சக்திகளால் ஓரம் கட்டப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையில் 2016 ஜனவரி 17 அன்று உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார் அவரது இறுதிக் கடிதம் ஒரு வரலாற்று ஆவணமாக மதிக்கப்படுகிறது.

தனது ஆழமான மனவேதனையை வெளிப்படுத்திய வெமுலாவின் இந்தக் குறிப்பு, ஜாதி எதிர்ப்பு விவாதங்களில் காதல் ஒரு சமூகக் கட்டமைப்பாகவும் அரசியல் கருவியாகவும் எவ்வளவு புறக்கணிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சமூக அமைப்பின் ஒரு கருவியாகக் கருதப்படும் காதல், படிநிலைகளும் முறையான ஒதுக்கி வைத்தலும் நிறைந்த சமூகத்தில் உருவாகும் தனிமை உணர்வை எதிர்கொள்ள முடியுமா?

**பட்டியலினப் பிரிவுக்குள் அடங்கியுள்ள ஜாதிக் குழுக்கள் அவரவர்களுக்கான சமூகநீதியை உறுதிசெய்யும்போது தான் ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுக்க முடியும் என்கிறார் கட்டுரையாளர். ஜாதியை மறுக்கும் காதல் பண்பாட்டு நிகழ்வு மட்டும் அல்ல; ஜாதி ஒழிப்புக்கான அரசியல் ஆயுதம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.**

அம்பேத்கர், பெரியார் போன்ற தீவிர சிந்தனையாளர்கள், சமூக மாற்றத்தையும் சமத்துவத்தையும் அடைவதற்கான அரசியல் பாதையாக காதலை ஒரு நெறிமுறைப் பொறுப்பாக ஏற்க வேண்டும் என்று நீண்ட காலமாக வலியுறுத்தி வந்துள்ளனர்.

1949 நவம்பரில் அரசியலமைப்புச் சபையில் ஆற்றிய தனது புகழ்பெற்ற இறுதி உரையில், அரசியல் சமத்துவத்துடன் ஆழமான சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்தியாவின் முரண்பாட்டை அம்பேத்கர் முன்கூட்டியே சுட்டிக்காட்டினார். உண்மையான சமூக சமத்துவம் இல்லாத நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ஆனால், ஜாதி எதிர்ப்பு இயக்கம் நடத்துபவர்கள் பெரும்பாலும் பட்டியலின ஜாதிகளை (SC) ஒரே மாதிரியான சமூகமாகக் கருதி, அதற்குள் உள்ள பல்வேறு குழுக்களின் படிநிலைகளைப் புறக்கணிக்கிறார்கள்.

2024 ஆகஸ்டில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மிகவும் முக்கியமானது. பட்டியலின ஜாதிகளுக்குள் துணைப்பிரிவை (Subclassification) தீர்ப்பு அங்கீகரித்தது. இது அம்பேத்கரின் நீதி, சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் சுதந்திரம் என்ற பார்வையை முன்னெடுக்கும் ஒரு கருத்தாகும். ஆனால், அந்த விவாதம் சமூக மாற்றத்தைக் கருதாமல் அரசியல் ஆதாயங்களை நோக்கி நகர்ந்தது தான் வேதனை. பட்டியல் பிரிவில் வகைப்படுத்தப்பட்ட உட்ஜாதி குழுக்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கியது சட்டப்படி சரியே என்று தீர்ப்பு கூறியது.

இந்தத் தீர்ப்பு, அன்பு, சுயமரியாதை மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. அரசியலமைப்பு வலியுறுத்திய சமூகநீதியின் சரியான பார்வையைக் கொண்டது என்பதே சமூகவியலாளர்களின் கருத்து. தீர்ப்பில் டி.ஒய் சந்திரசூட் பட்டியலின ஜாதிகளுக்குள்ளும் ஆழமான பிரிவினைகள் இருந்தாலும் உள்ஜாதி வன்முறைகள் நிகழ்வதைச் சுட்டிக்காட்டினார். பொருளாதாரம் அல்ல, ஜாதி அடிப்படையிலான புறக்கணிப்புதான் பிற்படுத்தப்பட்ட நிலையை நிர்ணயிக்கிறது என்பதை நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

### அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு

ஆனால் பீம் ஆர்மி, விடுதலைச் சிறுத்தைகள், இந்திய குடியரசுக் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி போன்ற தலித் அரசியல் அமைப்புகள் இந்தத் தீர்ப்பை எதிர்த்தன. மறுபுறம், அருந்ததியர், மாதிகா, வால்மீகி, பாங்கி சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உட்பிரிவு குழுக்களுக்குத் தனி ஒதுக்கீடு தேவை என்று வலியுறுத்தின. இந்த விவாதம் உரிமை கோரலுக்கும் புறக்கணிப்புக்கும் இடையிலான மோதலாக மாறியது.

தலித் பிரிவுகளுக்கு இடையிலான இந்த மோதலை தவிர்ப்பதற்கு காதலை ஒரு அரசியல் அறமாக மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தை இத்தீர்ப்பு வலியுறுத்துகிறது. கண்ணியம், பரிவு மற்றும் நீதிக்கான உறுதியான அர்ப்பணிப்பாக அரசியல் காதல் (Political Love) விளங்குகிறது. இடஒதுக்கீடு வெறும் பொருளாதார முன்னேற்றத்திற்காக அல்ல; கண்ணியத்தை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

தலித் பிரிவினர்களுக்கிடையே பாகுபாடுகளை; மோதல்களை தவிர்த்து ஜாதி எதிர்ப்புக்கான சமத்துவ அரசியல் முன்னெடுப்பதற்கு 'காதல் அரசியலாக' முக்கிய பங்காற்றுகிறது. தூய்மை; பாகுபாடு கருத்தியல்களை ஜாதி கலந்த காதல் தகர்க்கிறது. ஒடுக்கப்பட்ட ஜாதிகளுக்கு இடையிலான உயர்வு-தாழ்வுகளை நீக்குகிறது. உண்மையான உள்ளிழுக்கும் (Inclusive) சமூகநீதி இதுவே இட ஒதுக்கீட்டின் நோக்கமே இதன் மூலம் மீட்டெடுக்கப்படுகிறது. சமத்துவத்தை உருவாக்க வந்ததுதான் இட ஒதுக்கீடு என்றால் உட்ஜாதி பிரிவுகளாகி தனி இடஒதுக்கீடு வழங்குவது தானே நியாயம்.

உண்மையில் புதிரைவண்ணார், ஆதிஆந்திரர், பங்கி, அருந்ததியர் உள்ளிட்ட சிறுசிறு ஜாதிக்குழுவினரின் பிரச்சினைகள் கவனம் பெறுவதே இல்லை. இவர்களை அரவணைப்பதைவிட மோதல்களுக்கே முன்னுரிமை தரப்படுகிறது.

### தமிழ்நாட்டின் சூழல்

தமிழ்நாட்டில், 2024 ஜூன் மாதத்தில் தலித் பிரிவுக்குள்ளே உயர்ஜாதி பெருமை பேசும் பிரிவைச் சேர்ந்த பெண்ணை காதலித்த காரணத்தால் எம். அழகேந்திரன் கொலை செய்யப்பட்டார். ஜாதி எதிர்ப்பு இயக்கம் எத்தகைய முரண்பாடுகளோடு இருக்கிறது என்ற உண்மை அப்போது வெளிச்சத்துக்கு வந்தது. 2016-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வை, நீதிபதி தீர்ப்பில் சுட்டிகாட்டினார். ஜாதி இந்துக்களால் 98 வகையான பாகுபாடுகளும், பட்டியலினச் ஜாதிகளுக்குள்ளேயே 99 வகையான பாகுபாடுகளும் இருப்பதை அந்த ஆய்வு கண்டறிந்தது. ஜாதி இந்துக்களில் 98.4% பேர் ஜாதி மறுப்பு திருமணத்தை எதிர்க்கிறார்கள்; பட்டியலினச் ஜாதிகளில் 99.1% பேர் தங்கள் உட்ஜாதிகளுக்கிடையிலான திருமணங்களையே எதிர்க்கிறார்கள்.

**"உண்மையான மாற்றம், ஜாதியில் உள்ள முரண்பாட்டு வன்முறையை எதிர்கொண்டு, கரிசனம், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியலை உருவாக்குவதிலிருந்தே தொடங்குகிறது." என்ற ரோகித் எழுதிய வரிகளையே மீண்டும் நினைவுபடுத்த வேண்டும்.**

**('பிரண்ட் லைன்' ஆங்கில இதழில் ரவிச்சந்திரன் மற்றும் சாதிக் பி.கே எழுதிய கட்டுரையில் இருந்து).**

# அறிஞர்களை உருவாக்கிய பகுத்தறிவு ஆசிரியர்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். உடையார்பாளையம் குறித்து விவரிக்கிறது இக்கட்டுரைத் தொடர்.**



உடையார்பாளையத்தை, சிற்பி போல செதுக்கி, கல்வி - வேலைவாய்ப்பில் முன்னேற்றமடைய பாடுபட்ட பகுத்தறிவு ஆசிரியர் வேலாயுதத்தைப் போலவே, அங்கிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செந்துறையை அடுத்த கீழமாளிகையைச் சேர்ந்தவர் மற்றொரு ஆசிரியர். பழுத்த ஆன்மிகவாதியாக இருந்த அந்த ஆசிரியரை, பகுத்தறிவு ஆசிரியராக மாற்றியது பெரியாரின் 'குடி அரசு' இதழ். பெரியாரியவாதியாக மாறிய பின்னர், கருப்புச்சட்டையோடுதான் பள்ளிக்குச் செல்வார். பெரியாரின் பகுத்தறிவைத் துணைகொள்வதற்கு முன்பே, மறைமலை அடிகளாரின் மொழியியல் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

1926-31 வரையில் திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டப்படிப்பின்போது, மறைமலை அடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசுவும் பொன்னம்பலனாரும் ஒரே அறையில் தங்கிப் படித்தனர். அவர்கள் இருவரின் நட்பின் காரணமாக, கோடை விடுமுறையில் மறைமலை அடிகளார் இல்லம் சென்று, அங்கேயே இருந்து இலக்கணமும் இலக்கியமும் கற்றார். அதனால் விளைந்த தனித்தமிழ்ப்பற்றின் காரணமாக 'கனகசபை' என்ற வடமொழிப்பெயரை 'பொன்னம்பலம்' என மாற்றிக்கொண்டார். படித்து முடித்த பின்னர், இன்றைய நாமக்கல் மாவட்டம். பரமத்தி வேலூரில் உள்ள 'கந்தசாமிக் கண்டர் அறக்கட்டளை இந்து உயர்நிலைப் பள்ளி'யில் 1931 - 1946 வரை தமிழாசிரியராகப் பணியாற்றினார். அப்போது அந்தப் பள்ளியின் பெயர் வேலூர் இந்து செகண்டரி பாடசாலை என்றிருந்தது. பெருமுயற்சி எடுத்து அந்தப் பெயரை 1936-இல் 'கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளி' என மாற்றினார். பாவேந்தர் பாரதிதாசன் மூத்த மருமகன் கண்ணப்பனும் அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தன் மருமகனைக் காண்பதற்காக பாரதிதாசன் அங்கு வரும்போதெல்லாம், பொன்னம்பலனார் சந்தித்து உரையாடுவது வழக்கம். இருவருக்கும் இடையிலான அப்போதைய உரையாடல்களால் பாரதிதாசன் வடமொழிக் கலப்பினைக் கைவிட்டு, தனித்தமிழில் எழுதத் தொடங்கினார்.

அதேசமயம் பொன்னம்பலனாரிடம் பெரியாரைக் கொண்டு சேர்த்தார் பாரதிதாசன். அதன்பிறகு, 'குடிஅரசு' இதழை வாசிக்க ஆரம்பித்து 'தேவாரம்', 'திருவாசகம்' பாடுவதை நிறுத்தினார். 1938-இல் ராஜாஜி ஆட்சிக்காலத்தில் இந்தி திணிக்கப்பட்டபோது பெரியார், மறைமலை அடிகளார், திரு.வி.க. உள்ளிட்டோர் இணைந்து எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஒவ்வொரு வகுப்பாகச் சென்று, மாணவர்களிடம் பேசி, இந்தித் திணிப்புக்கு எதிரான எதிர்ப்புக் கனலை மூட்டி, மாணவர்களைப் போராட்டக் களத்திற்கு அழைத்து வந்தார். கந்தசாமி கண்டர் பள்ளியில் பணியாற்றிய காலத்தில், பள்ளி ஆண்டு விழாவுக்கு பெரியாரை அழைத்து வந்து, 'நவீன நந்தனார்' நாடகத்தை நடத்தினார். கோவில்களைவிட, பள்ளிகளே முக்கியம் என்ற கருத்தை மாணவர்கள் மத்தியில் ஆழமாக விதைத்து, பல மாணவர்களைப் பகுத்தறிவாளர்களாக்கியது இந்த நாடகம்.

1942 - 1946 வரையிலான அந்தக் கால கட்டத்தில், கந்தசாமிக் கண்டர் பள்ளியில் பொன்னம்பலனாரிடம் கல்வி பயின்றவர்தான் பின்னாளில் பெரியாரியல் பேரறிஞராகத் திகழ்ந்த வே.ஆனைமுத்து. அதன்பிறகு 1947-இல் சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் பொன்னம்பலனார் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்போது அவரிடம் பயின்றவர்தான் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர். இப்படியாகச் சென்ற ஊர்களில் எல்லாம் பல அறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரிய பகுத்தறிவு ஆசிரியர் பொன்னம்பலனார் தன் சொந்த ஊரையும் பெரியாரியப் பாதையில் பீடுநடை போட வைத்தார்.

தொடரும்..

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# ஜாதி ஒழிப்பை வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

மக்கள் மனதிலிருந்து ஜாதிய உணர்வை ஒழிப்பதற்கான பொறுப்பை அரசு முன்னெடுக்க வேண்டும்' என, ஆணவக் கொலை வழக்கு விசாரணையின் போது, சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகமங்கலம் மென் பொறியாளர் கவின், 25, ஆணவக் கொலை வழக்கில், கவின் காதலியின் தந்தையான போலீஸ் எஸ்.அய்., சரவணன் ஜாமின் மனு மீதான விசாரணை, உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் நேற்று நடந்தது. வழக்கை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். அரசுத் தரப்பு வழக்கறிஞர், 'மனுதாரர் தன் மனைவியுடன் சேர்ந்து ஆதாரங்களை மறைத்தார். அவரது மகள், கவின் இடையிலான காதல் விவகாரத்தை அறிந்திருந்தும், சுர்ஜித் குற்றம் செய்ய உடந்தையாக இருந்தார். ஜாமினில் விடுவித்தால் சாட்சிகளை அச்சுறுத்தக் கூடும். அது விசாரணையை பாதிக்கும்' என்றார்.

''குற்றம் செய்வதில் மனுதாரர் நேரடி பங்காற்றவில்லை என்றாலும், தன் மகனை ஜாதிய மனப்பான்மையுடன் வளர்த்ததற்காக அவர் பொறுப்பேற்க வேண்டும். ஜாதிய மனப்பான்மையின் உச்சகட்ட வெளிப்பாடே ஆணவக்கொலை. ஜாதிய உணர்வு சமூகத்தை பிளவுபடுத்துகிறது. ஒரு வழக்கில், உச்சநீதிமன்றம், 'ஜாதிய உணர்வு நாட்டிற்கே ஒரு சாபம்' என, சுட்டிக்காட்டியது.

பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில், 59 ஆணவக் கொலைகள் நடந்துள்ளன. ஜாதிய உணர்வு, மக்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி, ஒட்டுமொத்த அமைப்பையும் சீரழிக்கிறது. ஒவ்வொருவரின் மனதிலும் ஜாதிய உணர்வு நிலவும் சூழலில், இதற்காக மனுதாரரை அல்லது அவரது குடும்பத்தை மட்டும் குறைகூற முடியாது. ஒருவர் எவ்வளவு சக்தி வாய்ந்தவராக அல்லது சலுகை பெற்றவராக இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் ஜாதியவாதத்தின் தாக்கத்தை எதிர் கொள்கிறார். நீதிபதிகளும் இதிலிருந்து விலக்கல்ல!

வழக்குகளில் தகுதி, ஆதாரங்களின்படி தீர்ப்பளித்தாலும், அதற்குப் பின்னால் ஜாதி அடிப்படையிலான நோக்கங்கள் இருப்பதாக உள்நோக்கம் கற்பிக்கப்படுகிறது. இம்மாற்றத்தை அரசால் மட்டுமே கொண்டு வரமுடியும். இதற்காக அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சில அரசியல் கட்சிகள் ஓட்டு வங்கியை திரட்டுவதற்காக, ஜாதியைப் பயன்படுத்தி, இச்சமூகத் தீமைக்கு மேலும் வலு சேர்க்கின்றன. இத்தகைய மனநிலை தென்மாவட்டங்களில் அதிகம் காணப்படுகிறது.

பள்ளி மாணவர்களிடையே வன்முறை சம்பவம் ஒன்று நிகழ்ந்த போது, பள்ளிகளில் ஜாதிய உணர்வை ஒழித்து, சமூக நல்லிணக்கத்தை உறுதி செய்யும் வழிமுறைகளைப் பரிந்துரைக்க, ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் ஒரு குழுவைத் தமிழ்நாடு அரசு அமைத்தது. அக்குழு தன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தது. அப்பரிந்துரைகளை முழுமையாகச் செயல்படுத்தவில்லை. பட்டியல் ஜாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான, வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் எதிர்பார்த்த பலன்களை அளிக்கவில்லை. இச்சட்டத்தின் கீழ் பதிவாகும் வழக்குகள் அதிகரிக்கின்றன. இளம் தலைமுறையினரின் மனநிலையை மாற்றியமைக்க, பள்ளி அளவிலிருந்தே சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டும். படை வீரர்கள் நம் எல்லைகளில் தேசத்திற்குச் சேவை செய்கின்றனர். அவர்கள், எதிரியின் தாக்குதலை எதிர்கொண்டு, தாய்நாட்டைப் பாதுகாக்க தங்கள் உயிரைத் தியாகம் செய்யும்போது, அவர்களின் ரத்தம் அல்லது தேச பக்தியில் ஜாதி முத்திரை பதிவதில்லை.

ஜாதியை இயற்கை, அங்கீகரிப்பதில்லை. ஜாதி சார்ந்த செயற்கை யான தடைகளை சமூகம் கடந்து செல்ல வேண்டும். அப்போது தான், அனைவரும் சமம் என்ற உண்மை, ஆணவக் கொலையில் எந்த கவுரவமும் இல்லை; அது ஒரு வெட்கக்கேடான செயல் என்பதை உணர்ந்து விழித்தெழ முடியும். தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், வேட்பாளர்களின் ஜாதி, சமூகப் பின்னணியைக் கருத்தில் கொள்ளாமல், மக்களை ஓட்டளிக்கச் செய்ய முடியும் என்பதை நிரூபித்துள்ளன. ஜாதி சார்ந்த காரணிகளை பெருமளவு புறக்கணித்தே ஓர் அரசு அமைக்கப்பட்டுள்ளது.

மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படும் போது மட்டுமே, அம்மாநிலம் உண்மையான மாற்றத்தை எட்டியதாகக் கூற முடியும். மக்களின் மனதிலிருந்து ஜாதிய உணர்வை ஒழிப்பதற்கான பொறுப்பை முன்னெடுப்பை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்." என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

# கரட்டுப்பாளையம் செல்லப்பன் 82 வயதிலும் கொள்கை உறுதி!

சென்னிமலை கரட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்பன் அவர்கள் 17 வயதில் தந்தை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு சமூக மாற்றத்திற்கான பெரியாருடைய எதிர்நீச்சல் பணிக்கு வந்தவர். தற்போது 82 வயதிலும் பெரியாரியப்பற்றுடன் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தோழராக வாழ்ந்து வருகிறார்.

வயது முதிர்வு காரணமாக பெரியார் பெருந்தொண்டர் சென்னியப்பன் அவர்களின் உடல்நிலை அவ்வப்போது பாதிக்கப்பட்டு வரும் நிலையில் கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், திருப்பூர் முத்து, அய்யப்பன் ஆகியோர் ஜூன் 11, 2026 அன்று மாலை தோழரின் இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தனர்.



சிறுவயதில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் மதச் சடங்குகளுக்கு எதிராகவும் அன்றைய 1960,1970 காலகட்டங்களில் இருந்த மிகக் கொடுமையான ஜாதிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக செய்த பணிகளையும் பெரியாரிய இயக்கங்களில் நடந்த போராட்டங்கள் பிரச்சாரங்கள் சிறைக்குச் சென்று வந்த அனுபவம் ஊரில் கவுண்டர்கள் தாழ்த்தப்பட்டவர்களை நடத்திய ஜாதிக் கொடுமைகள் மற்றும் கவுண்டர்கள் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்டவர்களை அந்தப் பகுதியில் வாழ்ந்த பார்ப்பனர்கள் "வாடா போடா" என்று அழைத்து அவமரியாதை செய்வது வழக்கம். அதை எதிர்த்த அன்றைய திராவிடர் கழக தோழர்களின் "கலகங்களையும்" ஜாதி மறுப்புத் திருமணம் செய்தவர்கள் மீது ஊரில் உள்ள ஆதிக்க ஜாதியினர் செய்த கொடுமைகளை நேரில் பார்த்தவற்றையும் இன்று 2020, 2026 இல் சாதரணமாக நடக்கும் ஜாதி மறுப்புத் திருமணங்களையும் ஒப்பிட்டு மாற்றங்களைப் பற்றி பேசினார்.

பெரியாரை , பேரறிஞர் அண்ணாவை திருவாரூர் தங்கராசு , கோவை இராமகிருஷ்ணன், திருச்சி செல்வேந்திரன் போன்றவர்களை அழைத்து வந்து நடத்திய நிகழ்ச்சிகள், கிராமங்களில் சமூக விழிப்புணர்வூட்டும் நாடகங்களை நடத்தியது என தொடர்ந்து பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டு "இறுதியாக நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டே வீட்டிற்குள் போய் தன் மரண சாசனத்தை எடுத்து வந்து காட்டி எப்படியாவது என் உடலை மட்டும் நான் எழுதி வைத்த படி எந்த மூடநம்பிக்கை மதச் சடங்குகள் செய்யாமல் மருத்துவக் கல்லூரிக்கு ஒப்படைத்து விடுங்கள் "கோட்டை விட்டு விடாதீர்கள் , கோட்டை விட்டு விடாதீர்கள்" என்று பலமுறை கூறி கழகத் தோழர்களை வழி அனுப்பி வைத்தார்.

(செய்தி: தோழர். நிர்மல்குமார்)

# பயிலரங்கம் நடத்த கோவை மாவட்டக் கழகம் திட்டம்!

ஜூன்-6,மாலை 4.30மணி அளவில் கோவை மாவட்டக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் தமிழ்ப் புலிகள் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

21 ஆம் நம்பர் அரசுப் பேருந்து ஜாதிய தீண்டாமைகளைத் தகர்த்து கோவை தொண்டாமுத்தூர் அருகே கெம்பனூர் அண்ணா நகருக்கு பல வருடங்களுக்குப் பிறகு சென்றது. அதற்கு காரணமாக இருந்த சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு, முதலமைச்சர் ஜோசப் விஜய் அகியோருக்கு நன்றி பாராட்டுகிறோம்

பெரியார் கொள்கைகளை பரப்புவதற்கு தொடர்ந்து தெருமுனைக் கூட்டங்களை நடத்துவது;




சமூக வலை தளங்களில் இளம் தலைமுறையினர் மூலம் புதிய(apps) செயலிகளைப் பயன்படுத்தி பெரியாரிய கொள்கைகளைக் கொண்டு செல்வது;

விரைவில் புதிய தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார் , வெங்கட் ,சிவராசு,கிருஷ்ணன் சதீஷ் , ஸ்டாலின் ராஜா,சத்தியமூர்த்தி, தரணி, நவீன், கதிரவன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மருத்துவர் சிவபாலன் கட்டுரைக்கு பாராட்டு

கடந்த வாரம் பெரியார் முழக்கத்தில் வெளிவந்த மருத்துவர் சிவபாலன் எழுதிய கட்டுரை மிகவும் சிறப்பானது. சமூகத்தில் நிகழ்ந்துள்ள உளவியல் மாற்றங்களை புரிந்து கொள்ள உதவியது. பெரியாருடைய கொள்கைகளையும் திட்டங்களையும் கொண்டு செல்லும் வழிமுறைகளை உருவாக்குவதற்கு இந்த உளவியல் மாற்றங்களை எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டிய அவசியத்தை கட்டுரை உணர்த்துகிறது.

குடும்ப வாழ்க்கை முறை குறித்து பெரியார் முன்வைத்த கருத்துகளோடு இந்தக் கட்டுரையைப் பொருத்திப் பார்த்தால் புதிய வெளிச்சங்கள் கிடைக்கும் என்று கருதுகிறேன். சமூக ஊடகங்கள் இளைஞர்களிடம் உருவாக்கும் உளவியல் நெருக்கடிகளையும் முதியவர்களின் உளவியல் பாதிப்புகளையும் கட்டுரை அற்புதமாக படம் பிடித்திருக்கிறது ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை. – இரா.உமாபதி (சென்னை)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 18, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran